# 55வது நாளாக இலங்கைத் தமிழர் 'குலசிங்கம்' லண்டன் சிறையில் சாகும்வரை உண்ணாவிரதம்

பருவவெளியீட்டுப் பகுதி
யாழ்ப்பாண பொதுநூலகம்

விலை ரூபா 5.00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 பங்குனி 27 இதழ் 59
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 09 — 04 — 1992

(லண்டன்)
லண்டன் சிறைச்சாலை ஒன்றில் 55 நாட்களாக உண்ணாவிரதம் இருந்துவரும் இலங்கைத் தமிழரான சாம் குலசிங்கம், எவ்வேளையிலும் இறக்கும் நிலையை எய்தியுள்ளாரென டாக்டர்கள் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது: திரு. சாம் குல

[4ம் பக்கம் பார்க்க]

## யாழ்ப்பாணம் மீது தாக்குதல் இல்லை

(கொழும்பு)
யாழ். குடாநாடு மீது ஸ்ரீ லங்கா இராணுவம் மேற்கொள்ளவிருந்த தாக்குதல் நடவடிக்கை தற்போதைக்கு தவிர்க்கப்படும்என இராணுவ உயர்மட்டத்தில் கருத்து வெளியிடப்பட்டுள்ளது.

இதுவரை கூட்டுப்படை தலைமையகத்தின் பொறுப்பில் இருந்த போர்க்கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் இனிமேல்முப்படை தளபதிகள் மட்டத்தில் கையளிக்கப்படும் என அரசு உயர் மட்டத்தில் எடுகப்பட்ட தீர்மானத்தையடுத்தே மேற்படி வடபகுதி மீதான தாக்குல் நடவடிக்கைகள் தற்போதைக்கு தாமதப்படுத்தப்படும் எனஇராணுவ உயர் மட்டத்தில் முடிவு எடுக்கப் பட்டதாக கூறப்படுகிறது.

(க)

★ ,வெளிநாட்டு கூலிப்படை உதவியுடன்

# 'பிரேமா'வை கொலைசெய்ய 'லலித்' முயன்றதாக தகவல்?

## உடுகம்பொல கூறினாராம்

(கொழும்பு)
**ஜனாதிபதி பிரேமதாஸாவை கொலைசெய்ய வெளிநாட்டு கூலிப்படைகளின் உதவியை அப்போது அமைச்சராக இருந்த திரு. லலித் நாடியிருந்ததாக பிரதிப் பொலிஸ் மா அதிபர் உடுகம்பொல தெரிவித்ததாக பிரதமர் டி. பி. விஜய துங்க தெரிவிததுள்ளார்.**

அரசுக்கு எதிராக உடுகம் பொல தெரிவித்த குற்றச் சாட்டுகள் குறித்து, பிரதமர் விஜய துங்க நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கையில், கடந்த ஆண்டு யூன் மாதம் அப்போது அமைச்சராக இருந்த லலித் அத்துலத் முதலி, ஜனாதிபதி பிரேமதாசாவை கொலைசெய்வதற்காக வெளிநாட்டுக் கூலியாட்களை அமர்த்தும் முயற்சியில் வெளிநாட்டுச் சீமாட்டியான திருமதி மோட்டியர் என்பவருடன் சேர்ந்து சதிசெய்து வந்ததாக உடுகம் பொல இரகசியத் தகவல் ஒன்றைக் குற்றவியல் புலனாய்வுத் திணைக்களத்திற்குத் தெரிவித்திருந்தார்.

இதையடுத்து உடனடியாக விசாரணை ஆரம்பிக்கப்பட்டது. எனினும் உடுகம்பொல தெரிவித்த குற்றச்சாட்டுக்குப் போதிய ஆதரவான சான்றுகள் இல்லையென்பது தெரியவந்தது என்றும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார். (சி

## லலித் அத்துலத்முதலியின் வாக்குமூலம் பதிவு

(கொழும்பு)
இலங்கையின் புகழ் பெற்ற பத்திரிகைபாளரான ஜனப் இக்பால்அந்தாஸின் உயிருக்கு பிரதிப் பொலிஸ்மா அதிபர் உடுகம்பொல தீங்கு விளைவிக்கலாமென திரு. லலித் அத்துலத்முதலி அவரை எச்சரித்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுபற்றியும் பிரதமர் விஜயதுங்க தெரிவித்துள்ளார். இதன் முழு விபரமும் வருமாறு:

தமக்கு தீங்கு விளைவிக்கும் நோக்கில் திரு. உடுகம்பொல கண்டியிலிருந்து கொழும்பிற்கு கொண்டு வரப்பட்டாரென ஜனப் இக்பால் அத்தாஸ் குற்றவியல் புலனாய்வு திணைக்களத்திற்கு அறிவித்திருந்தார்.

இதையடுத்து இக்பால் அத்தாஸ் குற்றவியல் புலனாய்வு திணைக்களத்தின் விசாரணைக்குட்படுத்தப்பட்டார் அப்போது இச்செய்தியை திரு. அலத்துத்முதலி தமக்கு ஓர் எச்சரிக்கையாகத் தெரிவித்ததாகவும் உடனடியாக நாட்டைவிட்டுச் செல்லுமாறும் தமக்கு அறிவுரை கூறியதாகவும் இக்பால் அத்தாஸ் தெரிவித்திருந்தார்.

(4-ம் பக்கம் பார்க்க)

## அரசை கவிழ்க்கச் சதி; உடுகம்பொல மீது குற்றச்சாட்டு

(கொழும்பு)
ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட அரசைக் கவிழ்க்க முயலும் ஒரு கோஷ்டியின் கைப்பொம்மையாக, முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரேமதாச உடுகம்பொல செயற்பட்டுள்ளதாகவும், இச்சதித் திட்டங்கள், உரிய நேரத்தில், பொருத்தமான இடத்தில் வெளியிடப்படும்என்றும் பிரதமர் டி. பி. விஜயதுங்க அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையின் விபரம் வருமாறு:

ஜெனரல் ரஞ்சன் விஜயரத்னவின் கொலை சம்பந்தமாக புலனாய்வுகளை மேற்கொள்ள அனுமதியளிக்க

[4ம் பக்கம் பார்க்க]

## கிழக்கில் பாரிய தாக்குதல்

## வடக்கிலிருந்து படை நகர்வு

(கொழும்பு)
கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் பாரிய நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ள இராணுவம் தயாராகி வருகிறது. இதற்காக வடபகுதியில் இருந்து இரண்டு படையணிகள் கிழக்கிற்கு அனுப்பப்பட உள்ளதாகவும் இராணுவத் தலைமைப்பீடம் தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகள் கிழக்கில் பலமான நிலையில் இருப்பதால் படையினர் தினமும் பேரழிவைசந்திக்கவேண்டியுள்

[4ம் பக்கம் பார்க்க]

## ராணுவ தளபதிகள் பதவி விலகலாம்

(கொழும்பு)
இதுவரை கூட்டுப்படை தலைமையகத்தின் பொறுப்பிலிருந்த அதிகாரங்கள் முப்படைத் தளபதிகள் மட்டத்திற்கு மாற்றப் பட்டதனையடுத்து இராணுவஉயரதிகாரிகள் மட்டத்தில்பலத்த கருத்துவேறுபாடுகள் ஏற்பட்டுள்ளதாக இராணுவ வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகிறது.

இக்கருத்து வேறுபாட்டினையடுத்து இராணுவ உயரதிகாரிகள் பலர் தமது பதவிகளை

(4ம் பக்கம் பார்க்க)

## நுாரளையில் கடைகள் தீக்கிரை

(நுவரெலியா)
நுாரளை நகரில் கடந்த செவ்வாய் அதிகாலை மூன்று மணியளவில் 17 கடைகள் தீக்கிரையாகின.

இச்சம்பவத்துக் காரணம் இன்னும் தெரியவரவில்லை. பொலிசார் தீவிர விசாரணையை மேற்கொண்டுள்ளனர். (கே)

## புயலில் சிக்கி நொருங்கிய விமானத்திலிருந்து அரபாத் மயிரிழையில் உயிர் தப்பினர்

[திரிப்பொலி]
சகராபாலைவனத்தில் இடம் பெற்ற விமானம் நொருங்கிய விபத்தில் சிக்கிய பாலஸ்தீனிய [விடுதலை இயக்கத் தலைவர் ஜனப் யாசீர் அரபாத் (வயது 62] மயிரிழையில் உயிர்தப்பினர். இவர் சென்ற விமானத்தின் முன்று விமானிகள் ஸ்தலத்தில் உயிரிழந்தனர்.

இதுபற்றி தெரியவருவதாவது: குடானிலிருந்து நேற்று முன் தினமிரவு லிபியா நோக்கி புறப்பட்ட அரபாத்தின் விமானம் சகரா பாலைவனத்தில்புழுதிப் புயலில் சிக்கி

(4ம் பக்கம் பார்க்க)

## 3 பலஸ்தீனியர் பலி

(லண்டன்]
யாஸீர் அரபாத் உயிருடன் பாதுகாப்பாக இருக்கும் செய்

(4-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### புலமைப் பரிசில் பரீட்சை

ஆண்டு 5 (1991) புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை 11 - 04 - 92, 18 – 04 – 92, 23-04-92ம் திகதிகளில் மு. ப. 7–00, மு. ப. 11-000 மணி நேரங்களில் நடைபெறும். Paper Class சனி, ஞாயிறு மு. ப. 9-00 — 11–00 நடைபெறுகின்றது. புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (சி–6137)

### வகுப்புகள்

German Language (Deu-tsch) Spoken English and English with Grammar: ஆங்கிலம், ஜெர்மன் (டொச்) மொழிசள் விசேஷமாக தனிப்பட்ட ரீதியில் படிக்கலாம்: ச. சொர்ணலிங்கம், 4, கோபால் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (காங்கேசன்துறைவீதி, மனோகரா தியேட்டர் சந்திக்கு அருகாமையில்). (சி–6144)

## புத்தாண்டு விழா

(சித்தன்கேணி)

தமிழ் புத்தாண்டுவிழா சங்கானைப் பிரதேச செயலாளர் பணிமனையினரால் கொண்டாடப்படவுள்ளது.

# ஆசிய நாட்டவரின் வாக்குகளைப் பெற கைகூப்பி 'வணக்கம்' கூறும் பிரிட்டிஷ் வேட்பாளர்கள்!

(லண்டன்)

ஆசிய நாடுகளில் மட்டும் தான் தேர்தல் காலங்களில், வேட்பாளர்கள் வீடு வீடாகச் சென்று தமது இருகைகளையும் கூப்பி ''வணக்கம்'' கூறி, வாக்குசள் சேட்பது வழக்கம், குறிப்பாக இலங்கை, இந்தியா, மலேஷியா, சிங்கப்பூர், பங்களாதேஷ், பாகிஸ்தான் போன்ற நாடுகளில் மேற்படி முறையில் வாக்குகள் கேட்பது தலைமுறை தலைமுறையாக இருந்துவரும் வழக்கம்.

ஆனால் ஐரோப்பிய நாடுகளிலும் 'வணக்கம்'' கூறிவேட்பாளர்சள் வாக்குகள் கேட்கும் முறையை தற்போது காணக் கூடியதாக இருக்கிறது. அந்தளவுக்கு ஆசிய நாட்டுமக்கள் குறிப்பாக இலங்கை, இந்திய மக்கள் உலகெங்கும் செறிந்து வாழ்கின்றார்கள் என்றே கூற வேண்டும்.

பிரிட்டனில் இன்று தேர்தல் நடைபெறுகின்றது. இங்குள்ளமொத்ததேர்தல் தொகுதிகளில், 58 தொகுதிகளில் ஆகிய நாட்டு மக்கள் 15% வாழ்கின்றார்கள். இவர்களின் வாக்குகளை ப்பெற்றுக்கொள்வதற்காக பிரிட்டனிலுள்ள மூன்று முக்கிய கட்சிகள், 24 ஆசிய வேட்பாளர்களை தத்தமது கட்சிகளின் சார்பில் நிறுத்தியுள்ளார்கள்.

லேபர் கட்சி – 9 வேட்பாளர்சளையும், கன்சர்வேடிவ் கட்சி - 8 வேட்பாளர்களையும் லிபரல் கட்சி-7 வேட்பாளர்களையும் நிறுத்தியுள்ளது. இக்கட்சிகளின் தலைவர்களும், வேட்பாளர்களும், மேற்படி தொகுதிகளில் செறிந்து வாழும் ஆசிய கறுப்பின மக்களின் வீடுகளுக்குச் சென்று தமது இரு கைகளையும் கூப்பி ''வணக்கம்', கூறி வாக்குகள் கேட்பதாகவும் கூறப்படுகிறது. பிரிட்டிஷ் தேர்தல் அரங்கில் இம்முறை தான் மிகக்கூடுதலான ஆசிய வேட்பாளர்கள் நிறுத்தப்பட்டுள்ளார்கள்.

பிரிட்டிஷ் தேர்தலில் இம்முறை எந்தக்கட்சி ஆட்சியை கைப்பற்றும் என்று நிச்சயப் படுத்திக் கூறமுடியாத நிலை அங்கு தற்போது நிலவுகின்றது. பிரிட்டனில் தற்போது பொருளாதார நெருக்கடியே மக்களுக்கு பெரும் தலையிடியைக் கொடுத்து வருகின்றது. இதைத் தீர்ப்பதற்கு எந்தக் கட்சியின் விளக்கத்தை மக்கள் ஏற்றுக்கொள்கிறார்களோ அந்தக்கட்சியே ஓர் அளவுக்கு வெற்றிபெறக்கூடும்.

லேபர் கட்சி, கன்சர்வேடிவ் கட்சி, லிபரல்கட்சி இம்மூன்று கட்சிகளுமே பிரிட்டனில் மிக பலம்வாய்ந்த கட்சிகளாகும் எமதுநாட்டுத் தேர்தல்போல் தனிநபருக்கு வாக்களிப்பதில்லை. கட்சிக்குத்தான் மக்சள் அங்கு வாக்களிக்கின்றார்கள்

1960ம் ஆண்டில், பிரிட்டிஷ் மக்கள், தமது நாட்டுக்கட்சிகளின் மேல்வைத்திருந்தபற்று தற்போது 20 வீதம் குறைந்துவிட்டதாகவும் கூறப்படுகின்றது.

எதுவாக இருந்தாலும் இம்முறை எந்த ஒரு கட்சியும் பெரும்பான்மை இடங்களைக் கைப்பற்றி, அறுதிப்பெரும்பான்மையுடன் ஆட்சியைக் கைப்பற்றும் வாய்ப்பு அங்கு இதுவரை காணப்படவில்லை.

தற்போது ஆட்சியிலிருக்கும் கன்சர்வேடிவ் கட்சியும் மிகவும் பலம்குறைந்து இருப்பதினால், அங்கு வருங்காலத்தில் ஒரு கூட்டு ஆட்சிக்கே அதிகம் வாய்ப்பு இருப்பதாக அரசியல் அவதானிகள் கருத்து தெரிவிக்கின்றார்கள் (வி)

## அன்னைபூபதி நினைவாக அடையாள உண்ணாவிரதம்

(பருத்தித்துறை)

வடமராட்சியிலுள்ள சகல சனசமூக நிலையங்களும் 10–ம் திகதிவரை ஒவ்வொரு சனசமூக நிலையத்திலும் அன்னை பூபதி ஞாபகார்த்தமாக தொடர்ச்சியான அடையாள உண்ணாவிரதத்தை மேற்கொண்டுவருகின்றன. இவ் உண்ணாவிரதத்தை மாவீரர்களின் பெற்றோர்சள் ஆரம்பித்தும் முடித்தும்வைத்துவருகின்றனர். அன்னை பூபதி ஞாபகார்த்தமாக சிரமதான நடவடிக்கைகள், கூட்டங்கள், கலைநிகழ்ச்சிகள் என்பனவும் இடம்பெற்றுவருகின்றன. (F2)

## மருதடி உற்சவத்தில் முதலுதவிப் பிரிவு

(பண்டத்தரிப்பு

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய தேர், தீர்த்த உற்சவ தினங்களான இம் மாதம் 13ம்' 14ம் திகதிகளில் அங்கு வருகைதரும் பெருந்தொகையான பக்தர்களின் நலன்கருதி செண். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையின் முதலுதவி சிகிச்சை முகாம் ஆலய வீதியில் செயற்படவுள்ளது.

இதற்கான ஒழுங்குகளை படையின் வடபிராந்திய ஆணையாளர் டாக்டர் சுகந்தன் இன்னாசித்தம்பி செய்துள்ளார்.

## கூட்டம்

[யாழ்ப்பாணம்]

வடபிராந்திய வர்த்தக சங்கங்களின் சமாசத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது. தலைவராக திரு. க. வி. குலரத்தினமும் செயலாளராகதிரு.ஜே. சந்திரகாந்தனும், உப தலைவராக திரு. என், கே, குலசிங்கமும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

## பதவி உயர்வு

(யாழ்ப்பாணம்]

முல்லைத்தீவுமாவட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக் காரியாலயத்தில் உதவி முகாமையாளராகக் கடமையாற்றிய திரு தம்பிராசா சிவநாதன் மன்னார் மாவட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் மாவட்ட முகாமையாளராக பதவியுயர்வு பெற்றுள்ளார்.


# 31-ம் நாள் நினைவஞ்சலி



## கண்ணன் (தெய்வேந்திரன்)

சுழிபுரம்

மலர்வு: 08-06-1968

உதிர்வு: 10-03,-1992

எமது நிறுவனத்தில் தொழில்நுட்ப ஆசிரியராக கடமையாற்றிய [COM-PUTER INSTRUCTOR] S. தெய்வேந்திரன் [கண்ணன்] 10-03-92 இல் பாஹ்ரென் நாட்டில் திடீர் நோய்வாய்ப்பட்டதால மரணத்தை தழுவிக்கொண்டார். இதையிட்டு அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்ளுகிறோம். கண்ணனின் நினைவு எங்களின் மனதில் என்றென்றும் நிலைத்து வாழும்.

JAFFNA TECHNICAL INSTITUTE

[எ 2054]



# 31 ம் நாள் நினைவஞ்சலி



அமரர்

## பொன்னம்பலம் வாமதேவன்

மலர்வு: 19-03-1926

உதிர்வு: 11-03-1992

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்த எங்கள் அன்புத் தந்தையே உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

எங்கள் தந்தையாரின் ஈமக்கிரிகைகளில்] கலந்து கொண்ட, அனுதாபச் செய்திகள் அனுப்பிய உறவினர், நண்பர்கள் யாவரும் எமது இல்லத்தில் நாளை [10-04-1992] நடைபெறும் வீட்டுக்கிருத்திய மதிய போசனத்தில் கலந்து சிறப்பிக்குமாறு அழைக்கிறோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,<br>
மனைவி: வா. புஸ்பவதி<br>
மக்கள்: திருமதி மோ. சியாமளா,<br>
செல்வி. வா. சியாதா,<br>
திரு. வா. சுரேஸ்,<br>
மருமகன் ப. மோகன்குமார்'

உரும்பிராய் கிழக்கு,<br>
உரும்பிராய்.

[சி 6143]

COMMERCIAL BANK

# வர்த்தக வங்கி

## புத்தாண்டுப் பரிசுப் போட்டி

## முடிவுகள்

மேற்படி எம்மால் நடாத்தப்பட்ட போட்டியில் சரியான விடையளித்தவர்களில் 50 அதிர்ஷ்டசாலிகளை தேர்ந்தெடுத்துள்ளோம். பரிசு பெற்றவர்கள் புத்தாண்டு தினத்தன்று முற்பகல் 10 மணியளவில் (13-04 92) வங்கியில் நடைபெறும் விழாவில் கலந்து பரிசில்களைப் பெற்றுச் செல்லுமாறு வேண்டுகின்றோம்.

### பரிசு பெறுபவர்களின் விபரம்

முதலாம் பரிசு: கருணாகரன் தர்மகரசி
107, கனகரெட்ணம் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.

இரண்டாம் பரிசு: ஜே. றிச்சார்ட் றெஜேனல்ட்ஸ்
நவாலி வடக்கு, மானிப்பாய்.

மூன்றாம் பரிசு, சின்னவீரப்பன் ஆறுமுகம்
376, நாவலா வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.

மிகுதி 47 ஆறுதல் பரிசுகளுக்குமுரியோர்:

பெயர் — விலாசம்

01. செல்லப்பா நடராசா, சிவன்கோவிலடி, வட்டு. மேற்கு, வட்டுக்கோட்டை
02. கந்தசாமி ரூசாந்தன், C. M. S. ஒழுங்கை, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
03. திருமதி யோ மகேந்திரலிங்கம், ''வேம்போலை'' இணுவில் கிழக்கு, இணுவில்.
04. தம்பித்துரை நவரட்ணவேல் ஊர் எல்லை வீதி, மீசாலை மேற்கு, மீசாலை.
05. திருமதி ச. கலாராணி, 'ரேவதி இல்லம்'', பிரதான வீதி, இளவாலை
06. செல்லத்துரை சுரேந்திரன், கம்பன் கழகம், இல 300, நல்லூர், யாழ்ப்பாணம்.
07. சோமு நாகராஜன், 320, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
08. மகேஸ்வரி இலங்கைநாயகம், மண்டேலா புத்தகசாலை, இல 2, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
09. சரஸ்வதி வேலாயுதம், ''துரை பேக்கரி'' சூராவத்தை, சுன்னுகம்-
10. செல்வி யசியாஞ யேசுராஜன், 60,சென். பெனடிற்வீதி, நல்லூர, யாழ்ப்பாணம்
11. வடிவேல் சிவஞானம், பிள்ளையார் கோவிலடி, உயரப்புலம், ஆனைக்கோட்டை.
12. செல்வி அனெற் செல்வினி கிறிஸ்தோப்பர், 33,21, அடப்பன் வீதி, யாழ்ப்பாணம்.
13. ஆர். புவனேந்திரன், 750, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
14. அண்ணாமலைநாதன் தங்கேஸ்வரி, ''தெய்வபதி'' தென். மேற்கு, வட்டுக்கோட்டை.
15. மஞ்சுளா பரமேஸ்வரன், ''ராஜஸ்தான்'' பருத்தித்துறை வீதி, கொடிகாமம்.
16. சுகிர்தா பாலசிங்கம், கந்தரோடை, சுன்னுகம்.
17. திருமதி. இராஜலஷ்மி புவனேந்திரன், 163, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
18. தர்மினி நவரட்ணம், 121/1, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம்.
19, த. புஷ்பமலர், 64/14, முருகமூர்ததி வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
20. தேவலோசனி குமரவேள் 383 K. K. S. வீதி, யாழ்ப்பாணம்
21. கதிரித்தம்பி சுப்பிரமணியம், ''சிந்தாமணி'' நீலியம்பனைப்பிள்ளையார் கோவிலடி, மல்லாகம்.
22. செல்வன் நவரத்தினம் ஜெயரூபன், மீசாலை வடக்கு, ஊர்எல்லை வீதி, மீசாலை.
23. சுப்பிரமணியம் செல்லம்மா, கார்த்திகேசு வீதி, மீசாலை தெற்கு, மீசாலை.
24. துரைராஜகிங்கம் திருக்குமார், சேர்ச் அருகாமை (Near church) கொக்குவில் மேற்கு, கொக்குவில்
25. திருமதி நடேசகாந்தன் ஜெகதீஸ்வரி, 9, 2ம் குறுக்குத்தெரு, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம்.
26. செல்வி கந்தப்பு சுகந்தினி நாவலர் பாடசாலை வீதி, கோப்பாய், தெற்கு.
27. சார்ள்ஸ் நவரட்ணம் ஷெசின் கோமதி, புலவர் வீதி, நவாலி வடக்கு. மானிப்பாய்.
28. திருமதி சகுந்தலா குணரத்தினம். பிரதம தபால், அலுவலகம், யாழ்ப்பாணம்.
29. குருசுமுத்து பீற்றர் புலவர் வீதி, நவாலி-வடக்கு, மானிப்பாய்.
30. சாந்தி அமிர்தலிங்கம் 49, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம்.
31. S. சண்முகலிங்கம் வாசிகசாலையடி, உடுப்பிட்டி.
32. தேவலிங்கம் ஜெயரத்தினம், A. குலசேகரம் மே/பா, புகையிரத நிலைய வீதி, மல்லாகம்.
33. ஆறுமுகக் குருக்கள் சத்தியபாமா, புலவனுர் ஒழுங்கை, கல்வியங்காடு, யாழ்நகர்.
34. இ. சரஸ்வதி, இல. 55, துர்க்கை அம்மன் கோவிலடி நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.
35. சபாபதிப்பிள்ளை தியாகராசா, 'கனல்' ஒழுங்கை, மாதகல்.
36. சுப்பிரமணியம் செல்வராசா, கைதடி தெற்கு, கைதடி.
37. நடராஜா செல்வவினாயகன், துரை வீதி, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.
38. திருமதி யோகலஷ்மி ராஜரட்ணம், உடையார் வளவு உரும்பிராய்,
39. சியாமளா துரைச்சாமி, இல. 200, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
40. வயிரவன் இராசையா (தோரையன்), ''மடத்துக்கடவை'' அல்வாய் மேற்கு, அல்வாய்.
41. குணரட்ணம் தேவிகா, 49/3, வில்வத்தெரு வீதி, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.
42. திருமதி இராசாத்திப்பிள்ளை சிவராமகிருஷ்ணன், செட்டியார் வளவு சுன்னுகம்.
43. திருமதி சுந்தரேஸ்வரி நவரட்ணராஜா, ''ஸ்ரீசக்தி'' யாழ். வீதி, மானிப்பாய்.
44. கணபதி சிறிதரன், கைதடி மேற்கு, கைதடி.
45. செல்வி மாலதி சிவஞானசுந்தரம், 'பழமுதிர்ச்சோலை' நீலியம்பனை, மல்லாகம்.
46. கந்தசாமி இந்திராணி, உச்சியோடை ஒழுங்கை, மானிப்பாய்.
47. ஐயாத்துரை இரத்தினமாலா ''லக்ஷ்மி தாரகை'' அல்வாய் மேற்கு அல்வாய்.

**வர்த்தக வங்கி** 474, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

உங்கள் வெற்றி எங்கள் பலம்.

(ஏ 2062)

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

## விஞ்ஞானபீட முதலாம் அரையாண்டுப் பரீட்சை 1991

மேற்படி பரீட்சைக்கான அனுமதி அட்டைகளை மீள்பரீட்சார்த்திகள் பரீட்சைக்கிளை, யாழ். பல்கலைக் கழகத்திலிருந்து 09-04-92 முதல் பெற்றுக்கொள்ளலாம்.

பதிவாளர்

(எ- 2070)

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## வெளிவாரிப் பட்டப்படிப்பு கற்கை நெறி

முதற்கலை / முதல் வர்த்தக 1990/91

வழிப்படுத்தும் பயிற்சிII

முதற்கலை/முதல் வர்த்தக கற்கை நெறிக்கு பதிவு செய்துள்ள மாணவர்களுக்கு 20-4-92 தொடக்கம் 30-04-92 வரை வழிப்படுத்தும் பயிற்சி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்தில் இடம்பெறவுள்ளது. இக்கற்கை நெறிகளுக்குப் பதிவுசெய்துள்ள மாணவர்களை இப்பயிற்சியில் கலந்துகொள்ளுமாறும் நேர அட்டவணை பதிவேடு ஆகியவற்றை 20-04-92ம் திகதிக்கு முன்னர் நேரில் பெற்றுக்கொள்ளுமாறும் வெளிவாரிப்பட்டப்படிப்பு இணைப்பாளர் கேட்டுக் கொள்கின்றார்.

பதிவாளர்

(எ-2061)

---

## இன்று

(யாழ்ப்பாணம்)

தவக்காலத்தை முன்னிட்டு நடைபெற்றுவரும் ஞானஒடுக்கத்தின் ஐந்தாம்நாளாகிய இன்று யாழ்.மரியன்னை பேராலயத்தில் (பெரிய கோவில்) வண. பிதா. இம்மானுவல் யேசுதாசன் அடிகளாரினுல் மாலை 5 மணிக்கு ''பாவமன்னிப்பு'' என்னும் மறை உரையும், யாழ். அடைக்சலநாயகி ஆலயத்தில் வண. பிதா. அ. பிலிப் அடிகளினுல் ''இயேசுவின் கதைகள்'' என்னும் மறை உரையும் இடம்பெறவிருக்கிறது.

நாளை 6ம் வெள்ளியாதலால் வியாகுலமாதாவின் கல்வாரிக் கோயிலில் காலை 6-00மணி திருப்பலியும். மாலை திருப்பலியும் ஆசந்தியும் இடம்பெறும்.

## இராசிபலன்

09/04/1992

வியாழக்கிழமை

(தமிழுக்கு பங்குனி 27)

ஸப்தமி பி. இ. 5.25வரை, திருவாதிரை பி. இ. 2.24 வரை, மரணயோகம், இராகு காலம் பகல் 1.36 முதல் 3.06 வரை, சுபநேரம் காலை 7.36 முதல் ৮.06 வரை.

மேஷம்; தொழில் கௌரவம், ஆனந்தம் பணவரவு.

இடபம்: மனக்குளப்பம், வேலைப்பழு, செலவு.

மிதுனம்: சுபமானநிகழ்ச்சி தலைமைப்பதவி தானதர்மம்.

கடகம்; வம்பு விவகாரம். மனநலபாதிப்பு வேற்றுமை.

சிங்கம்: சத்துருஜயம், மதிநுட்பம், பயணம்.

கன்னி: மேல்மட்டத்தார் ஆதரவு, காரியசித்தி விரதம்.

துலாம்: பாதகமான முடிவு அலைச்சல், இனசனப்பகை.

விருச்சிகம்: கடும்சொல். தொழில்நஷ்டம் வெறுப்பு.

தனுசு: மாறுபட்டசெயல், காரியதாமதம், குடும்பசுகம்.

மகரம்: மனவொற்றுமை, தானதர்மம், வஸ்திராலயம்.

கும்பம்: உறவினர் பகை, கருத்துவேறுபாடு உடல் உபாதை.

மீனம்: அதிகாரிகள் சினம் வேண்டாத உறவு கடன்.

— ஜோஸ்யர்.

## தவக்கால நற்சிந்தனை

''ஒருவன் என்வார்த்தையைக் கடைப்பிடிப்பானுகில் என்றுமே சாகான்''

(அரு. 8:51)

வாழ்வுதரும் வார்த்தை இறைவார்த்தை. இந்த வார்த்தையை நாம் தினம் தினம் படித்தால் நெறிதவறோம்.

மோ-தார்சீசியஸ்

---

ஆயிரம் யானை கொன்றல் பாடிடும் காவியமோ?
ஆண்டவன் தீமை வென்ற காதையின் ஓவியமோ?

தபக்காலத்தை முன்னிட்டு

## கல்வாரிப் பரணி

பக்தி இசை உரை நாடகச் சித்திரம்

காலம்: 1992, ஏப்பிரல் 10, 11, 12ம் திகதிகளில் (வெள்ளி, சனி, ஞாயிறு)

நேரம்: தினமும் மாலை 6-45 மணிக்கு

இடம்: மன்ற அரங்கு, 238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

தயாரிப்பு:-

## திருமறைக் கலாமன்றம்

★ ஆசனப் பதிவுக்கு முன்கூட்டியே அலுவலகத்துடன் தொடர்புகொள்ளவும்.

(சி-6140)

# இந்திய மீனவர்களால் இலங்கை கடற்படைக்கு பெரும் தலையிடி

## வைஸ் அட்மிரல் கவலை

(கொழும்பு)

இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பிராந்தியத்தில் மீன் பிடிப்பது தமக்கு தலையிடி தரும் பிரச்னைகளை உண்டுபண்ணுகிறது என்று இலங்கை கடற்படை தளபதி வைஸ் அட்மிரல் கிளான்ஸி பெர்ணண்டோ தெரிவித்துள்ளார்.

இலங்கை கடற்படையிடம் குறைந்தளவு மூலவளங்களே உள்ளன என்றும் இது தீவிரவாதிகள் ஊடுருவலை தடுக்க போதுமானதாக இல்லையென்றும், அத்தோடு இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பிராந்தியத்தில் மீன் பிடிக்கும்போது அவர்களை கைது செய்வது மீன்பிடி உபகரணங்களை எடுப்பத எல்லாம் தமக்கு தொல்லைதரும் பிரச்னையாக உள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். [கே]

### புயலில் சிக்கி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யதை யடுத்து தரையுடனை முழுத் தொடர்புகளையும் இழந்தது.

சகாரா பாலைவனத்திற்கு அருகிலுள்ள முகாம் ஒன்றில இருந்த பலஸ்தீனிய போராளிகளைச் சந்திக்கவே இவர் சென்றுகொண்டிருந்தார்.

இந்த விமானத்தில் அரபாத்துடன் ஒன்பது சகாக்களும் விமான ஊழியர் மூவரும், மூன்று விமானிகளும். ஏழு பயணிகளும் சென்றிருந்தனர்.

திடீரென தாக்கிய புழுதிப் புயலினலே விமானம் சடுதியாக கீழ் இறங்கி நிலத்துடன் மோதுண்டு சிதறியது. இதனல்விமானிகள் மூவரும் ஸ்தலத்திலே உயிரிழந்தார்கள். அரபாத் எதுவித காயமுமின்றி மயிரிழையில் உயிர் தப்பினர்.

சகாராவிலிருந்து 70 கிலோ மீற்றர் தூரத்தில் அமெரிக்க செய்மதி ஒன்றினல் 15 மணி நேரங்களின் பின்னர் இவர்கள் கண்டுபிடிக்கப்பட்டனர்.

அரபாத் பயணம் செய்த விமானம் காணமல் போனதையடுத்து உலகெங்கும் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. பல ஐயப்பாடுகளின் மத்தியில் 15 மணி நேரத்தின்பின் இந்த பரபரப்பு அடங்கியது.

தற்போது அரபாத் திரிப்போலி நோக்கி சென்று கொண்டிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன. (சி-மா)

### 3 பலஸ்தீனியர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தியை கேட்டு இஸ்ரேலின் கட்டுப்பாட்டிலுள்ள 'ஹாஸா' பகுதியில் மகிழ்ச்சி ஆரவாரம் செய்த பலஸ்தீனியர்கள் மீது இஸ்ரேலிய படையினர் சுட்டதில் மூவர் உயிரிழந்தனர். 12 பேர் படுகாயமடைந்தனர்.

## கணித பாடத்தில் 12வீத மாணவரே சித்தி

(கொழும்பு)

அண்மையில் வெளியான க. பொ. த. (சாதாரணதர) பரீட்சை முடிவுகளின்படி அகில இலங்கை ரீதியில் 12 சதவீதமானவரே கணித பாடத்தில் சித்தியடைந்துள்ளனர்.

இது கல்வித்திணைக்கள வட்டாரங்களில் பெரும் அதிர்ச்சியைக் கொடுத்துள்ளது.

இதேவேளை வேறுசிலபாடங்களிலும் இம்முறை மாணவரின் சித்தி எதிர்பாராத விதத்தில் அமைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (கே)

## பிரிட்டனில் இன்று தேர்தல்

(இலண்டன்)

பிரிட்டனின் பாராளுமன்றத்திற்கான பொதுத்தேர்தல் இன்று நடைபெறவுள்ளது.

4 கோடியே 30 லட்சம் வாக்காளர்கள் வாக்களிக்கவுள்ள இத்தேர்தலில் 2,000 வேட்பாளர் போட்டியிடவுள்ளனர். [க]

## இ.போ.ச. ஊழியர் சம்பளம்

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய போக்குவரத்துச்சபை ஊழியர்களுக்கான 5 மாத சம்பளம் மிகவிரைவில் வழங்கப்படவுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த வருடம் அக்டோபர் மாதம் முதல் மாசி மாதம் வரையிலான சம்பளப்பணம் காசோலையாகவும் பணமாகவும் வழங்கப்படவுள்ளதாகவும் இதற்கான நடவடிக்கைகள் யாவும் பூர்த்தி செய்யப்பட்டுவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க)

## திருடப்பட்ட துணிகள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை சுவாமியார் வீதியில் ஒரு வீட்டில் உட்புகுந்து அங்கிருந்த துணிகளைத் திருடிக்கொண்டு சென்றவர், வீதியில் மக்களால் மடக்கிப்பிடிக்கப்பட்டார்.

## இன்றைய உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினரால் நடத்தப்படும உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இன்றைய ஆட்டங்கள்.

யாழ். பல்கலைக்கழக அணியை எதிர்த்து குருநகர் பாடும் மீன் அணி யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட மைதானத்தில் மோதுகின்றது. நியூ சுப்பர் அணியை எதிர்த்து மோகனதாஸ் அணி சாவகச்சேரி மட்டுவில் மகா வித்தியாலய மைதானத்தில் மோதுகின்றது. (சி)

## நல்லை ஆதீனத்தின் ஆண்டு விழா

(யாழ்ப்பாணம்)

நல்லை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ நல்லைக் குருமணி அவர்களின 11வது ஆண்டுக் குருபூசை விழா, இன்று வியாழக்கிழமை நல்லை ஆதீனத்தில் நடைபெற இருக்கிறது.

இன்று காலை 8-00 மணியிலிருந்து விசேட வழிபாடுகள், பூசைகள், அபிஷேகங்கள் நனடபெறவுள்ளன. நண்பகல் 12-00 மணிக்கு அன்னதானம் நடைபெறும்.

மாலை 3-00 மணிக்கு இசை அரங்கு, பண்ணிசைக் கச்சேரி இடம்பெறும். 6-00 மணிக்கு கடபன் கழகத்தின் நாடகக் கலைஞர்கள் வழங்கும் 'பக்த நந்தனர்' இசை நாடகம் இடம்பெறும். (56)

### 55வது நாளாக

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சிங்கம் 1970ம் ஆண்டு இலங்கையிலிருந்து வந்து லண்டனில் வசித்துவருகிறார். 1936ம் ஆண்டு லண்டன் கிழக்குப் பகுதியில் நடந்த கார்க் குண்டு வெடிப்புச் சம்பந்தமாக இவர் குற்றவாளியாகக் காணப்பட்டுச் சிறையில் இருந்துவருகிறார். இக்கார்க் குண்டு வெடிப்பில் 3 தமிழர் பலியாகியிருந்தனர்.

தாம் நிரபராதி எனவும், வழக்கை மீள்பரிசீலனைசெய்யுமாறும் இவர் உள்நாட்டுத் திணைக்களத்தைக் கோரியிருந்தபோது, மீள் பரிசீலனை செய்யப்படும் என்றும், நீதி வழங்கப்படும் எனவும் உறுதி அளிக்கப்பட்டதாம். ஆனல் இதுகாலவரை நடவடிக்கை எதுவும் எடுக்கப்படாமையால் திரு. குலசிங்கம் உண்ணாவிரதத்தில் இறங்கினர்.

நீராகாரம் உட்கொண்டு உண்ணாவிரதம் இருக்கும் இவரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதுடன், லண்டன் கத்தோலிக்கச் திருச்சபையும் உண்ணாவிரதத்தைக் கைவிடுமாறு கேட்டும் அவர் மறுத்துவிட்டார். மானத்தைக் காப்பாற்ற இறப்பதே மேல் என அவர் தெரிவித்துள்ளார்.

இதே மறியற்சாலையில் ஐ. ஆர். ஏ. தீவிரவாதி பொபி சாண்டஸ் 52 நாட்கள் உண்ணாவிரதம் இருந்து வந்தது தெரிந்ததே.

பிரிட்டனில் இன்று தேர்தல் நடக்கும் தருணத்தில் இவரது உண்ணாவிரதம் பிரிட்டனில் வாழும் ஆசிய மக்களிடையே பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (கே)

## அரசைக்கவிழ்க்கச் சதி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வில்லை என்று அவர் கூறுகிறார். அத்தகைய புலனாய்வுகள் கொழும்பு குற்றக் கண்டுபிடிப்பு பணியகத்திற்கும் குற்றவியல்புலனாய்வுத் திணைக்களத்திற்கும் உரியது என பொலிஸ் மா அதிபர் எனக்கு தெரிவித்துள்ளார். எனவே இது அவருடைய தலைமையில் இயங்கிய விசேஷ இயக்கங்கள் பணியகத்துக்குரிய விடயமாக இருக்கவில்லை. புலனாய்வுகளின் அடிப்படையில் தான் உயர்நீதிமன்றத்தில் குற்றப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அதன் விசாரணையானது 1992 ஏட்ரல் 27ந் திகதிக்கு கால அறுதி செய்யப்பட்டிருக்கிறது.

விசேஷ இயக்கங்கள் பணியகமானது போதை வஸ்துக்கள் தங்கம் ஆகியவற்றின் கடத்தல்களை கண்டுபிடித்து தடுப்பது போன்றவற்றுக்கு ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. எவ்வாறுயினும் இந்த பிரிவினல் திரு. உடுகம்பொலவின் சகோதரரான மேஜர் பத்மசிறி உடுகம்பொலவின் மீது சாட்டப்பட்ட தங்ககடத்தல் வேலைகள் கண்டுபிடிப்பதற்கு இயலாமல் இருந்து பெரும் வியப்புக்கு உரியதாகும் அவருக்கு எதிராக தற்போது நீதிமன்றத்தில் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பிரதி பொலிஸ் மா அதிபர் உடுகம்பொல பற்றியும் அவரது செயற்பாடுகள் பற்றியும் காலத்திற்குகாலம் பல முறைப்பாடுகள் செய்யப்பட்டுவந்ததாக பொலிஸ் மா அதிபர் எனக்கு தெரிவித்திருக்கிறார்.

கொடை வழங்கும் முகவர்கள், மனித உரிமை இயக்கங்கள், வெளிநாட்டு தூதுவர்கள் உள்ளிட்ட சர்வதேச நிறுவனங்கள் அவருடைய நடத்தைபற்றி மிகபாரதூரமான விமர்சனங்களை செய்து வந்தன. எதிர்க்கட்சி தலைவரும் ஏனைய அரசியல் கட்சித்தலைவர்களும் அவருக்கு எதிராக முறைப்பாடுகளை செய்துள்ளனர்.

ஏராளமான மனிதஉரிமை மீறல்களுக்கு காரணகர்த்தாவாக அவர் இருந்தார் என்று அவர்கள் குற்றஞ் சாட்டியிருந்தன.

சட்டத்தரணிலியனுராய்ச்சி கொலை வழக்கின்போது உயர் நீதிமன்றம்திரு. உடுகம்பொல மீது கண்டனங்களை தெரிவித்திருந்தது. நீதிமன்ற விசாரணைகளின் போது அம்பலப்படுத்தப்பட்ட தகவல்களை பயன்படுத்திசட்டத்தரணி லியனுராய்ச்சியின் மரணத்தை ஏற்படுத்தியவர் யார் என்பதை சட்டத்தை செயற்படுத்தும் அதிகாரிகள் துருவி ஆராய்வார்கள் என்று உறுதியான நம்பிக்கையினை நீதிமன்றம் தெரிவித்திருந்தது.

மேற்போன்றவற்றை கருத்தில் கொண்டு திரு உடுகம்பொலவின் ஆண்டு சேவை நீடிப்புமறுக்கப்பட்டது இந்த பின்னணியை உற்றுநோக்கும் போது உடுகம்பொலஅரசுக்கு எதிராக தீயபழிவாங்கு நோக்குடையவராக இருக்கின்றார் என்பது புலனாகும் அரசாங்கத்தை அவதூறு செய்வதற்கு எத்தகைய பொய்யான தகவல்களையும்கூறுவதற்கு அவர் ஆயத்தமாக இருக்கின்றார் என்பதற்கு அவருடைய அறிக்கை சான்று பகருகின்றது.

உடுகம்பொல நாட்டை விட்டு செல்லவுள்ளார் என பத்திரிகைகளின் மூலம் அறிந்த குற்ற புலனாய்வுத் திணைக்களம் அவர் நாட்டை விட்டுசெல்வதை தடுப்பதற்கு நீதி மன்றத்திற்கு விண்ணப்பம் செய்தது சட்டத்தரணி லியனுராய்ச்சியின் கொலை சம்பந்தமாக மேலும் விசாரணை நடத்துவதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

கடந்த மாதத்தில் நீதிமன்றம் தமது கடவுச்சீட்டினை குற்றவியல் புலனாய்வுத்திணைக்களத்திற்கு ஒப்படைக்குமாறு வினவுதலின் பொருட்டு குற்றவியல் திணைக்களத்தின் முன் தோன்றுமாறும் பணித்தது.

உடுகம்பொல தேடிப்பிடிக்க முடியாதவராக இருந்தமையினல் நீதிமன்றக் கட்டளையை அவரிடம் குற்றவியல் புலனாய்வுத் திணைக்களத்தால் ஒப்படைக்க முடியவில்லை. எவ்வாறுயினும் நீதிமன்றக்கட்டளைக்கு பெரும் பிரசாரம் கிடைத்திருக்கிறது. உடுகம்பொல குற்றவியல் புலனாய்வுத் திணைக்களத்திற்குசென்று தாம் அறிந்த சகல விடயங்களையும் கூறுவார் என்ற அறிக்கையொன்றை சில பத்திரிகைகள் பிரசுரித்திருந்தன.

கறுப்புப் பூனைகள் என்று அழைக்கப்பட்ட கொலையாளிக் குழுக்களை உருவாக்குவதற்கு தமக்கு பொறுப்பெதுவும் இல்லை என்று உடுகம்பொல கூறுகின்றார். ஆனல் உடுகம்பொல கடமையாற்றிய எல்லாப் பிரதேசங்களிலும் முதலாவதாக தென்பகுதியிலும் அதன் பின்னர் வடமேல் மாகாணத்திலும் அதனையடுத்து மத்திய மாகாணத்திலும் கறுப்புப்பூனைகள் ஒருங்குற்றுதோன்றியுள்ளனஎன்பது முக்கிய நிகழ்ச்சியாகும். ரேஹான் குணவர்த்தன எழுதிய ஜே, வி. பி. கிளர்ச்சி எனும் நூலில் திரு. உடுகம்பொல பற்றி பின்வருமாறு கூறியுள்ளார். மிகவும் அபாயகரமான, ஈவிரக்கமற்ற எதிரியாக உங்களை ஜே. வி. பி. யினர் கருதுகிறார்கள் என்ற கேள்வியை பிரதிபொலிஸ்மா அதிபரிடம் கேட்டபோது 'அவர்கள் அவ்வாறு இனம் காணுவதில் தவறு இல்லை அவர்கள் மீது மிககடுமையாக செயல்பட்டுள்ளேன் என்று தெரிவித்துள்ளார்.

உடுகம்பொல அவர்களால் காலம் தாழ்த்தி செய்யப்பட்ட குற்றச்சாட்டுக்கள் சொந்த நலத்தோடு சம்பந்தப்பட்ட காரணங்களின் அடிப்படையில் செய்யப்பட்டுள்ளன என்பது புலனாகும். அவருக்கு எதிராக விசாரணை ஒன்று நடத்தப்படும் இத்தருணத்தில் தம்மை பாதுகாத்துக்கொள்வதற்காக எடுக்கப்பட்ட முயற்சியாக இது அமைகின்றது. ஆனல் அவருடைய கெட்டபெயர் அவரையும் தாண்டி வெகு தூரம் சென்றுள்ளது என்பதை அவர் மறந்துள்ளார் போலும் உடுகம்பொலவின் அறிக்கையில் பல பொய்கள் அடங்குகின்றன. அவர் இதுகாலமும் பொலிஸ் சேவையில் உள்ளவராகையால் அந்த அறிக்கை தாபன விதிக்கோவையை மீறுகின்றன அவருடைய அறிக்கை நீதிமன்றத்தை அவமதிக்கும் ஒன்ருகும். (மா)

### கிழக்கில்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

ளது. மேலும்கிழக்கில் சிவில்நிர்வாகத்தை நடாத்தமுடியாததொரு நிலை ஏற்பட்டுள்ளது இதையடுத்தே அடுத்த மூன்று மாதத்தில் கிழக்கிலிருந்து புலிகளை முற்ருக அழிக்கும் நோக்கில் இந்த பாரிய தாக்குதல் இடம்பெறவுள்ளதாம்.

இதற்கென பெருமளவு படைகளை கொண்ட இரு படையணிகள் வடபகுதியிலிருந்து கிழக்கிற்கு நகர்த்தப்படவுள்ளது. பாரிய இராணுவ தளபாடங்களும் இங்கு அனுப்ப ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறன ஒரு தாக்குதலில நூற்றுக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்படலாமென இராணுவ அதிகாரிகள் கூட அச்சம் தெரிவித்துள்ளனர். (சி;க]

### ராணுவ தனபதிகள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இராஜினமாச் செய்யலாமெனவும் பரவலாகச் செய்திகள் அடிபடுகின்றன.

இவ்வாறு அதிகாரங்கள் பிரிக்கப்பட்டதனை இராணுவ கடும்போக்காளர்கள் ஆதரிப்பதாகவும் மற்றவர்கள் எதிர்ப்பதாகவும் கூறப்படுகிறது. (க)

### லலித்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதையடுத்து திரு, லலித் அத்துலத்முதலி குற்றப்புலனாய்வுப் பிரிவின் விசாரணைக்குட்படுத்தப்பட்டு அவரது வாக்குமூலமும் பதிவுசெய்யப்பட்டதாம்.

இதனல் இக்பால் அத்தாஸிற்கு தகுந்த பாதுகாப்பு வழங்கப்பட்டதாம். இவை திரு. உடுகம்பொல சிக்கிக்கொண்ட சில பிரச்னைகள் என்றும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார். (சி)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 09-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at th General Post office Sri Lanka under Licence Number B/10336/8I